# சென்னை புத்தகச் சங்கமம்

உலகப் புத்தக நாள் பெருவிழா | 18 - 27, ஏப்ரல் 2014

இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானம், சென்னை–14.

ஆலோசனைக் குழு:

திரு. க.ஜெயகிருஷ்ணன்,
பெரிகாம் பப்ளிகேசன்ஸ்

திரு. தி.வேணுகோபால்,
விழிகள் பதிப்பகம்

திரு. டி.பாலசுப்பிரமணியன்,
பதிப்புத்துறை ஆலோசகர்

திரு. கோ.ஒளிவண்ணன்
எமரால்டு பதிப்பகம்

திரு. பு.கார்த்திகேயன்,
வானவில் புத்தகாலயம்

திரு. வீ.அன்புராஜ்,
பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்

07.04.2014

பேரன்புடையீர், வணக்கம்.

உலகப் புத்தக நாளைக் கொண்டாடும் விதமாக ‘நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா’ ஆதரவுடன் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் வருகிற 18-4-2014 முதல் 27-4-2014 வரை நடத்தும் ‘சென்னை புத்தகச் சங்கமத்தில்’ பங்கேற்க விண்ணப்பித்திருந்த நிறுவனங்களுக்கு புத்தக அரங்கம் ஒதுக்கீடு செய்வதற்கான குலுக்கல் 07.04.2014 அன்று சென்னை பெரியார் திடலில் பங்குபெறும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது.

தங்கள் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரங்கு எண்ணுடன் அரங்க வடிவமைப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் நிறுவனப் பெயர் பலகை வடிவமைப்பில் ஏதேனும் மாற்றம் இருந்தால் உடனடியாகத் தெரியப்படுத்துக.

**காட்சி நேரம் :** அரங்கு உரிமையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புத்தகக் காட்சி நேரம் பகல் 2 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. தேர்தல் நடைபெறும் நாளான 24.04.2014 அன்றும் பகல் 2 மணி முதல் நடத்துவதற்கு காவல்துறை அனுமதி அளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சனி, ஞாயிறு கிழமைகளில் மட்டும் காலை 11 மணி தொடங்கி நடைபெறும்.

**புத்தக வெளியீட்டு வாய்ப்பு :** அரங்கு உரிமையாளர்கள் தங்கள் நிறுவனத்தின் வெளியீடுகளை விழா மேடையில் அறிமுகம் செய்யும் வண்ணம் மாலை 3.30 மணி முதல் 5.30 மணி வரை 2 மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்குரிய கட்டணம் ரூபாய் 2,000/- மட்டுமே. 19ஆம் தேதி முதல் 26ஆம் தேதி வரை மொத்தம் எட்டு நாட்கள் வாய்ப்பு உள்ளது. 15.4.2014க்குள் முன்பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும்.

**இணையத்தில் இலவச விளம்பர வாய்ப்பு :** அரங்கு உரிமையாளர்கள் தங்கள் நிறுவனத்தின் விற்பனையில் முதல் பத்து இடத்தில் உள்ள வெளியீடுகளின் விவரத்தினை chennaiputhagasangamam@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பினால் சென்னை புத்தகச் சங்கமம் இணையதளத்தில் (www.chennaiputhagasangamam.com) இலவசமாக விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

...2

**விளம்பர வாய்ப்புகள் :** புத்தகச் சங்கமம் நடைபெறும் மைதானத்திலும், அரங்குகள் அமைந்துள்ள உள்பகுதிகளிலும் கீழ்காணும் விளம்பர வாய்ப்புகள் உள்ளன. அரங்கு உரிமையாளர்களுக்கு விளம்பரம் செய்ய முன்னுரிமை அளிக்கப்படும். தேவைப்படும் விளம்பரப் பதாகைகளுக்கு உரிய கட்டணத்தை 15.04.2014க்குள் செலுத்தி முன்பதிவு செய்ய வேண்டும். விளம்பரப் பதாகைகள் கொடுக்கவேண்டிய கடைசி நாள் : 16.04.2014. தொடர்புக்கு : எஸ்.விமல்ரஜ் (96266 57609)

| வ.எண். | விளம்பரம் செய்யும் இடம் | விளம்பர பதாகை அளவு | பதாகை வைக்க வாய்ப்புள்ள இடங்கள் | ஒரு இடத்திற்கு உரிய கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | புத்தகச் சங்கமம் நடைபெறும் மைதானத்தில் அரங்குகளின் விளம்பரப் பதாகை | 8 x 10 அடி | 200 | ரூ. 5,000/- |
| 1. | அரங்கு விபரம் குறித்த அறிவிப்பு அட்டவணை பேனர் மேல்பகுதியில் | 20 x 2.5 அடி<br>10 x 2.5 அடி | 5<br>1 | ரூ. 10,000/-<br>ரூ. 5,000/- |
| 2. | அவரச வழிப் பாதை இரு புறத்திலும் | 20 x 8 அடி<br>10 x 8 அடி | 10<br>2 | ரூ. 5,000/-<br>ரூ. 2,500/- |
| 3. | சிறப்பு தள்ளுபடி விற்பனை அரங்குகளுக்கு எதிர்ப்புறம் | 20 x 8 அடி<br>10 x 8 அடி | 5<br>1 | ரூ. 5,000/-<br>ரூ. 2,500/- |
| 4. | இரண்டாம் நுழைவாயில் வலதுபுறம் | 30 x 10 அடி | 6 | ரூ. 10,000/- |

**அரங்கு பராமரிப்பு :** ஒவ்வொரு அரங்கிற்கும் ஒரு பில்லிங் டேபிள், இரவு பாதுகாப்பிற்கு திரை துணி, குப்பைகள் போடுவதற்கு தனி பை ஆகியவை வழங்கப்படும். கூடுதலாக டேபிள், அலமாரி வாடகைக்கு வேண்டுவோர் திரு. முஜீப் (98413 72619) அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

மேலும், தங்கள் அரங்கிற்குள் வைக்கப்படவுள்ள புத்தகங்கள், அலமாரி முதலியவற்றை 17.4.2014 காலை 11 மணிக்கு மேல் 18-4-2014 காலை 11 மணிக்குள் கொண்டு வந்துவிட வேண்டுகிறோம். 18.4.2014 அன்று மாலை 6 மணிக்கு தொடக்க விழா நடைபெற இருப்பதால் 3 மணிக்குள் தங்கள் அரங்கைத் தயார் நிலையில் வைக்க வேண்டுகிறோம்.

விழா அழைப்பிதழ் விரைவில் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

நன்றி!

தங்கள் அன்புள்ள,

**(ப.சீதாராமன்)**
மேலாளர்